

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## இயேசுவின் சுவிசேஷம் வழங்கும் "என் பிதா" என்ற பந்தம்!

இயேசுவிற்கு வியாகுலமாய் இருந்த நேரம், இம்மண்ணுக்குரிய யாதொரு கஷ்ட சூழ்நிலை அல்ல.... மாறாக, அந்த சூழ்நிலையில் "பிதாவின் சித்தம்" செய்திட தடையாய் நின்ற "தன் சுய சித்தத்திற்கே" வியாகுலமடைந்தார்! கெத்செமனே தோட்டத்தில் தனியே சென்று "என் பிதாவே.... என் சித்தத்தின்படியல்ல...." என்ற வார்த்தைகளையே திரும்பத் திரும்ப கூறினார்! (மத்.26: 38-44). "என் பிதாவே... என் பிதாவே" என மன்றாடிய இயேசுவின் அடிச்சுவடுகளையே இன்றும் அவரது சீஷர்கள் பின்பற்றுகிறார்கள்! என்ன ஆச்சரியம் "பிதா ஒப்புக்கொடுத்த பாத்திரம்" இயேசுவின் கைகளில் வந்தது! (மத் 26:45). பிதா அவருக்கு தந்த பாத்திரத்தை பருகிய வெற்றி சிகரமே.... கொல்கொதாவின் கொடுமுடி! கெத்செமனே ஜெபம் தந்த பேரின்பமோ "என் பிதா!" என்ற இனிய பந்தம்!! பிதாவை சந்திக்கும் "இந்த இனிய உறவே" இயேசுவின் சீஷனை 'சிலுவை பாதையில்' முன்னேறிச் செல்ல நடத்துகிறது !

-*tr*

ஜனவரி 2019

பெட்டகம் 21

பரல்கள் 1



## சீஷர்கள் கண்டடையும் 'அர்ப்பண' ஓட்டம்!

இரட்சிக்கப்பட்டு, இயேசுவின் உண்மை சீஷனாய் மாறிவிட்ட ஒருவனே, விண்ணிற்குரியவன்! குருவின் அடிச்சுவட்டை பின்பற்றத் துவங்கிய நாள் தொடங்கி... அவனது மாறாத இலக்காய் இருப்பதெல்லாம், கிறிஸ்துவையே அடைந்திட வேண்டும்! அவரது சாயல் அணிந்திட வேண்டும்! என்ற இலக்கு மாத்திரமே ஆகும்! தன்னைச் "சுற்றியுள்ள பாவம், மற்றும் தனக்குண்டானயாவற்றையும் உதறித் தள்ளாமல்" இந்த இலக்கின் பாதை ஓடிட இயலாது.... ஆம், முற்றிலும் அர்ப்பணித்து விட்ட சீஷனாகாமல் அந்த 'ஓட்டம்' சித்தி பெறாது!

உலகத்தின் யாவற்றையும் நஷ்டம் என உதறிய அனேகர்.... மீண்டும் திரும்பிவந்து, அதை லாபமாக்கி 'பின்மாறிய மாந்தர்கள்' ஏராளம்! ஆனால், ஆதாயமாய் கருதப்படும் இந்த உலகத்தை நஷ்டமாய் மாத்திரம் எண்ணாமல்.... அதை 'குப்பையாகவும்' உதறியவர்கள் மாத்திரமே இலக்கை நோக்கி "ஆசையாய் தொடர்ந்து" கிறிஸ்துவையும், அவரது சாயலையும் அடைவர்! (பிலி.3:12,14). ஆம், தங்கள் இலக்கை நோக்கித் தொடரும் ஓட்டத்தை, பரிசுத்த ஆவியின் துணையோடு ஜெயமே ஜெயமென முடிப்பார்கள்.

*-Ed*


2019 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.**150/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **பிப்ரவரி 10ம்தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal

## ஒவ்வொரு ஆண்டும், தேவ நோக்கம் நிறைவேறுவதே பாக்கியம்!

**வி**சுவாசிகளாகிய நம் ஜீவியத்தில், தேவனுடைய பூரண சித்தத்தை இழந்திடும் அபாயம் நம் யாவருக்குமே இருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாய் இருக்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன்தான் சவுல்! ஆனால், காலா வட்டத்தில், அவனுடைய பொறுமையின்மையினிமித்தமும், அவனுடைய கீழ்ப்படியாமையினிமித்தமும் தேவன் அவனைப் புறக்கணிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. அவர் புறக்கணித்தப் பிறகும்கூட, சிலவருடங்கள் சவுல் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கத் தான் செய்தான்..... ஆயினும் அவனோ, தேவன் அவனுடைய வாழ்க்கையில் கொண்டிருந்த அவருடைய சித்தத்தை இழந்து போனான்! சாலொமோனைக்கூட மற்றொரு மாதிரியாய் நாம் கூறிட முடியும். தன்னுடைய ஆரம்ப வருடங்களில் தேவனைப் பிரியப்படுத்திய சாலொமோன் தன் பிற்கால ஜீவியத்தில், புறஜாதிய ஸ்திரீகளைத் திருமணம் செய்து வீழ்ச்சியுற்றான்!

வனாந்தரத்தில் அழிந்த இஸ்ரவேலர்களின் மாதிரியை வைத்து நமக்கு எச்சரிப்புகளை புதியஏற்பாடு இரண்டுமுறை எடுத்துரைத்திருக்கிறது. "**கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதே" இஸ்ரவேலர்களைக் குறித்த தேவனுடைய பரிபூரண சித்தமாயிருந்தது.** இருப்பினும் அவர்களில் இரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் "தேவனுடைய மிகச் சிறந்த வாக்குதத்தத்தை தங்கள் அவிசுவாசத்தினிமித்தமும், தங்கள் கீழ்ப்படியாமையினிமித்தமும் இழந்து போனார்கள்" (1கொரி.10:1-12; எபி.3:7-14). இன்றும் இவர்களைப் போலவே திரளான விசுவாசிகள், தங்கள் வாழ்விற்காக **தேவன் கொண்டிருந்த பூரண திட்டத்தை** தங்கள் கீழ்ப்படியாமையினிமித்தமும்..... தங்கள் திருமணம் அல்லது தங்கள் வேலையைத் தெரிந்து கொள்வதில் கைக்கொண்ட ஒத்த வேஷத்தினிமித்தமும் இழந்து போனார்கள்!

"தேவனுடைய பூரண சித்தம்" என்ற புத்தகத்தை எழுதிய **G.கிறிஸ்டியன் வெய்ஸ்** கீழ்கண்டவாறு அப்புத்தகத்தில் விவரித்திருக்கிறார். ஒரு வேதாகமப் பள்ளி ஆசிரியர் தன்னுடைய

மாணாக்கர்களுக்கு ஒரு சமயம் கூறும்போது "மாணவர்களே, என் ஜீவியத்தில் தேவன் எனக்குத் தந்த முதல் பங்கை இழந்து, அதற்குப் பதிலாக அவர் தந்த இரண்டாவது பங்கில்தான் என் பெரும்பாலான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறேன்! தேவன் என்னை ஒரு மிஷனெரியாக இருக்கும்படியே வாலிப நாட்களில் என்னை அழைத்தார். ஆனால் நானோ, என் திருமணத்தினிமித்தம் அவர் அழைப்பிற்கு புறமுதுகு காட்டினேன். என் சுயநலத்தினிமித்தம் ஒரு வங்கியில் வேலைக்குச் சேர்ந்து பணம் சம்பாதித்தேன்! இருப்பினும், தேவனோ என்னிடம் இடைவிடாது பல வருடங்கள் தொடர்ந்து பேசினார். நானும் தொடர்ந்து அவர் அழைப்பிற்கு இணங்க மறுத்து விட்டேன்! இச்சமயத்தில் என் சிறு குழந்தை ஒரு நாற்காலியிலிருந்து தவறி விழுந்து மரித்துப் போனது! இச்சம்பவம் என்னை வெகுவாக பாதித்து தேவனுக்கு முன்பாக முழங்காலிடச் செய்தது. அன்று இரா முழுவதும் தேவனுக்கு முன்பாக கண்ணீரோடு ஜெபத்தில் தரித்திருந்தேன். அந்த இராத்திரியில்தான் என் ஜீவியத்தை தேவனுடைய கரத்தில் முழுமையாக ஒப்புவித்தேன்! ஆனால் இப்போதோ நான் ஆப்பிரிக்கா தேசத்திற்குச் சென்று ஊழியம் செய்யும் காலம் கடந்துவிட்டது! ஆம், ஊழியத்தின் வாசல் அடைபட்டுப் போனது!!

இவ்வாறு தேவன் எனக்கென்று தந்த முதல் பங்கை நான் இழந்து போனேன். ஆண்டவரே, நீர் என்னுடைய மீதியான ஜீவியத்தை ஏதாகிலும் ஊழியத்திற்குப் பயன்படுத்தும்! என மாத்திரமே நான் ஜெபிக்க முடிந்தது. அதன் விளைவாய், இப்போது நான் ஒரு வேதாகமப்பள்ளியின் ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். இருப்பினும், இந்தப் பணி தேவன் எனக்குத் தந்த இரண்டாவது பங்குதான் என்பதை என்னால் மறக்கவே முடியவில்லை!" என வருத்தத்துடன் கூறினார்.

அந்தப் புத்தகத்தில் **வெய்ஸ்** சகோதரன் மேலும் கூறுகையில் "மேலே கூறப்பட்ட வேதாகமப் பாடசாலையின் ஆசிரியர்களைப் போலவே சாட்சி உடையவர்கள் ஏராளமானபேரை நான் சந்தித் திருக்கிறேன். அவர்கள் கூறிய சாட்சிகள் கண்ணீரில் எழுதப் பட்டதாகவே இருக்கிறது!!" எனவும் எழுதினார். இவ்வாறு தேவனு டைய பரிபூரண சித்தத்தின் வழியில் பிரவேசிக்காமல், தங்கள் சுய சித்தத்தில் தடம் புரண்டவர்களுக்கு வேறுவழியைத் தேவன் திறந்து விட்டார் என்பது உண்மைதான். அதற்காக நாம் தேவனுக்கு நன்றியும் கூற கடமைப்பட்டிருக்கிறோம். அப்படியிருந்தும், இப்போது அவர்கள் சென்று கொண்டிருக்கும் வழி, தேவன் அவர்களுக்கென தெரிந்துகொண்ட அவருடைய பூரண சித்தத்தின்படியான முன்குறித்த

*வழி அல்லவே அல்ல! இவ்வாறு, ஒருவன் தன் ஜீவியத்தில்* **தேவனுடைய பூரண சித்தத்தை தன் வாழ்வில் இழப்பது** *பெருந்துயரமேயாகும்!*

*அன்பார்ந்த கிறிஸ்தவர்களே, இப்போது நீங்கள் வாசித்த வாசகங்களையும் அதன் சாட்சிகளையும் உங்கள் மனதில் நன்றாய் பதித்து வையுங்கள்...... அப்போதுதான், நீங்களும் தேவன் உங்கள் வாழ்விற்கென தெரிந்து கொண்ட அந்த* **ஆரம்ப முதல் பங்கை** *இழந்து போகாமல் கவனமாய் வாழ்ந்திட முடியும்! தேவனுடைய கரத்தில் தங்களை முழுமையாய் ஒப்புக்கொடுத்த யாதொருவனுடைய ஜீவியத்தையும் தேவன் எப்படியாவது பயன்படச் செய்வார் என்பதில் சந்தேகமேயில்லை! இருப்பினும்,* **நாமோ அவருடைய சித்தத்தை தீவிரமாய் தேடி** *அதற்கு நம்மை முழுமையாய் ஒப்புக்கொடுக்கிற வர்களாய் இருந்திடவே நாடக்கடவோம்!! அப்போது மாத்திரமே, நம் ஜீவிய பயணத்தை, வேதனை நிறைந்த வெட்கத்திற்கு நம்மை விலக்கி காத்துக்கொள்ள முடியும்.*

*நம் சுய சித்தத்தின்படி நாமே ஒரு இடத்தைத் தெரிந்து கொண்டு ஜீவித்திடும் வாழ்க்கை ஒருபோதும் வெற்றியுள்ள ஜீவியத்தை நமக்குத் தராது! ஆண்டவருக்கென முழுமையாக பயன்படும் ஊழியத்தைப் பெற்றிடவும் முடியாது! அல்லது யாதொருவருக்கும் ஆசீர்வாதமாக இருந்திடவும் முடியாது! இன்று அநேகருடைய எண்ணமோ, தங்கள் வேலையையும், தாங்கள் வசிக்கும் இடத்தையும் தாங்களே தெரிந்து கொண்டு, அதிலே தங்கியிருந்து ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்வதற்கே முயற்சிக்கிறார்கள். தேவனும் தம்முடைய மிகுந்த இரக்கத்தின்படி, இதுபோன்ற விசுவாசிகளை மிகக்குறைந்த அளவு பயன்படுத்திடவும்கூடும்! ஆனால் தேவனுடைய திராட்சத் தோட்டத்தில் அவர்களின் பங்கோ வெகு குறைவாகவே இருக்கும்!!*

*இவர்கள் மாத்திரம் தங்கள் ஆரம்ப ஜீவியத்திலேயே தேவனுடைய திட்டத்தை முழு இருதயமாய் நாடி அவருடைய பூரண சித்தத்தின் மையத்தில் நிலைத்திருந்திருப்பார்களேயாகில்* "**வாழ்வின் முழு பங்கையும்**" *அவர்கள் ஜெயமாய் நிறைவேற்றியிருந்திருக்க முடியும். இவ்வாறெல்லாம் 'நிலை கொண்டிருக்கும்' தேவனுடைய பிரமாணங்களை இவர்கள் கவனயீனமாய் அலட்சியப்படுத்தியதின் விளைவாய், இன்றோ அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி கூனிக் குறுகியதாயும், சொற்ப கனியுடையதாகவும் தேங்கிவிட்டது!*

*இப்போதும் என்ன? தேவனுடைய சித்தம் செய்வதில் நீங்கள் எந்த விஷயத்திலாவது அவருக்கு கீழ்ப்படியாதிருந்தால், இன்னும் காலம் விரயமாவதற்கு முன்பாக அவரிடத்தில் மனந்திரும்பி கிட்டிச்*

*சேருங்கள். ஆம், உங்களில் அநேகர் யோனாவிற்குச் சம்பவித்தது போலவே, தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் பிரதான பாதைக்குள் 'மீண்டும்' திரும்பி வந்துவிடமுடியும்!*

**நாம் யாராயிருந்தாலும் நம் ஒவ்வொருவருக்கும் ஒரே ஒரு வாழ்க்கைதான் இருக்கிறது! இந்த ஒரே வாழ்க்கையின் முடிவில், பவுலைப்போலவே "தேவன் எனக்கென நியமித்த ஓட்டத்தை நிறைவாய் ஓடி முடித்தேன்"(2தீமோத்தேயு.4:7) என கூற முடிந்தவர்கள், மெய்யாகவே பாக்கியவான்கள்!!**

*இந்த உலகமும் அதிலுள்ள இச்சையான யாவும் ஒரு நாள் ஒழிந்து மறைந்து போகும்! ஆனால், தேவனுடைய சித்தத்தை கவனமாய் பின்பற்றி வாழ்கிறவனெவனோ, அவனே என்றென்றைக்கும் ஒழிந்து போகாத நிரந்தரமான பங்கைப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திடுவான் (1யோவான்.2:17-* JPB *ஆங்கில வேதாகமம்) எனக்கூறும் அற்புத வசனத்தை நாம் மனதில் கொள்ளக்கடவோம்.*

*"நீங்கள் வாழ்வின் அர்த்தத்தையும் அதன் நோக்கத்தையும் அறியாத மனுஷர்களைப்போல் இராமல், இந்த ஜீவியத்தை மிகுந்த பொறுப்புள்ள உணர்வோடு கடைப்பிடித்து வாழுங்கள். இந்த நாட்களின் பல்வேறு கஷ்டங்களையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், உங்கள் காலத்தை செம்மையாய் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஏனோ-தானோ என்று இராமல் தேவனுடைய சித்தம் இன்னதென்றறிந்து, அதை* **உறுதியாகப் பற்றிக் கொண்டு** *வாழுங்கள்" (எபேசியர்.5:15-17* JPB *ஆங்கில வேதாகமம்) என எச்சரிக்கும் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள்!*

*– சகரியா பூணன்*

---

## எனக்காக விந்தை புரிந்த கர்த்தர்!

***எ****ன் கணவர் இறந்த பின்பு, சுமார் ஒரு வருடம், என் சரீரத்தில் அடிக்கடி மயக்கமும், சரீர வலியும், மனதில் சோர்வும் என்னை அதிகமாய் தாக்கியது. சுமார் 200 இரவுகளுக்கு மேலாய் என் கணவருடைய வியாதிப்படுக்கை அருகில் இரவுமுழுவதும் தூங்காமல், நான் கண்விழித்து அவருக்கு பணிவிடை செய்தேன். இந்நிலையில், நான் தேவனைக் கூப்பிட்டு அழைத்திட முடியாதது போன்ற பெலவீனத்தாலும் ஆட்கொள்ளப்பட்டேன். இவ்வாறு* **'தேவனை தொடர்பு கொள்ளும்' என் சம்பாஷணை** *என்னிடத்தில் குறைந்ததுதான் என் மனதிற்கு அதிக வருத்தத்தை தந்தது!*

*நான் உடனே துரிதப்பட்டு, கர்த்தருடைய சமூகத்திற்குள் பிரவேசித்திடும் என்னுடைய உறவை புதுப்பித்துக் கொண்டேன்.*

நான் ஆண்டவரைப் பார்த்து “ஓ என் தேவனே, நான் உம்மிடம் உறவு கொள்வதற்கு ‘என்னைச் சந்தித்த பல்வேறு சிலுவைகள்’ உதவி செய்திருப்பதைக் கண்டிருக்கிறேன். இப்போதும் கர்த்தாவே, என் கணவர் மரித்து விட்டாலும், என்னுடைய மாமியார் மூலம் ‘என்னை விட்டு நீங்காத என் சிலுவையை’ எனக்குத் தொடர்ந்து தருவதற்காய் உமக்கு நன்றி!” எனக் கூறினேன்!

**என் கணவருக்குப் பின்பு, தேவன் எனக்கென்று வைத்திருக்கும் சிலுவையின் புதிய அத்தியாயத்திற்குள் நான் மகிழ்ச்சியுடன் அடியெடுத்து வைத்தேன்!**

என் கணவர் மரிப்பதற்கு முன்பான குறுகிய இடைவெளியில் இரண்டு பெண் பிள்ளைகளை தேவன் எனக்கு கொடுத்திருந்தார். சகலமும் தேவனுடைய ஞானத்தின்படியே நடப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். என் மூத்த மகன் இப்போது உயிரோடு இருந்தால், நான் அவனை கல்லூரியில் சேர்த்து விட்டு “தூய வாழ்த்து கன்னி மாடத்திற்கு” நான் சென்றிருப்பேன். அவ்வாறு நான் சென்றிருந்தால், தேவன் என்மீது வைத்திருந்த நோக்கங்களும், சிலுவை பாதைகளும் சிதைந்தல்லவோ போயிருக்கும்! என, அவரது ஞானத்தைக் கண்டு வியந்தேன்!

என் கணவர் உயிரோடு இருந்த காலத்தில் ‘கடைசி சில மணி நேரங்கள் தவிர’ தொடர்ச்சியாக பல தீங்குகள் அவர் எனக்குச் செய்திருந்தாலும், நானோ **அவர்மீது வைத்திருந்த ‘மதிப்பை’ சிறிதுகூட இழக்காமல்** இருக்க தேவன் எனக்கு உதவி செய்திருந்தார்! ஆகவே, அவர் மரித்தவுடன் அவரது அடக்க ஆராதனையை சீரும் சிறப்புமாய் செய்திட என்னுடைய சொந்த அரண்மனை ஆஸ்தியிலிருந்து ஏராளமாய் செலவழித்து, அவரை எல்லோருக்கும் முன்பாக கனப் படுத்தினேன்! அவருடைய அடக்கத்திற்குரிய சகலமும், இராஜ அந்தஸ்து கொண்டதாயிருக்க நானே பொறுப்பெடுத்து கவனித்துக் கொண்டேன். இருப்பினும், என் கணவருக்கு நான் இவ்வாறு தாராளமாய் செலவு செய்ததை தடை செய்ய, பல்வேறு ரூபத்தில் என் மாமியார் முயற்சித்தார்கள். நானோ இந்த சமயத்தில், தேவ ஞானத்தின் படி, அவர்கள் கொண்டு வந்த தடையை மறுத்து, மிகச் சிறப்பான அடக்கம் நடைபெற்று முடிய கடைசி வரை கருத்தாய் இருந்தேன்!

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, என் சொந்த சகோதரன், தன் கௌரவத்தை பிடித்துக்கொண்டு அவருடைய தங்கையாகிய எனக்கு ‘இந்த நேரத்தில்கூட’ உதவி செய்ய முன்வரவில்லை. என் கணவரின் மரணத்திற்குப் பிறகு, அவருடைய அலுவலக மேஜைக்குச் சென்று, ஒழுங்கு செய்யப்படாத ஏராளமான கோப்புகள் (Files) குவிந்து

கிடந்ததைக் கண்டேன். எனக்கோ, அவருடைய வியாபார சம்பந்தமான யாதொன்றும் தெரியாது! அது சம்பந்தமாய், உதவி செய்திட யாரும் முன்வரவில்லை. யாரிடத்திலும் சென்று ஆலோசனை கேட்க முடியாமல் தத்தளித்தேன். இந்த நிலையில், **பெலனற்ற ஒரு குழந்தை** தகப்பனின் மார்பில் சாய்ந்து கொள்வதைப்போல், நான் கர்த்தரை சார்ந்து கொண்டேன்! இந்த கோப்புகள் அனைத்தையும், சரியான விதத்தில் கையாண்டு, நஷ்டம் ஏற்படாமல் சகலமும் சித்திபெற தேவன் எனக்கு விசேஷ ஞானம் தந்தார்! அவருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக!

என் கணவர் எழுதி வைத்திருந்த, அத்தனை நிலுவை குறிப்பு களையும், ஒன்று விடாமல் பரிசீலனை செய்து, அந்தந்த நபர்களுக்கும், கம்பெனிகளுக்கும் நான் ஒருவளாக நின்று 'நோட்டீஸ்' அனுப்பினேன். **கர்த்தர் துணை நின்று,** குழப்பத்தில் மூழ்கியிருந்த நிலுவை தொகைகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக மீட்கப்பட கர்த்தர் உதவி செய்தார்.

**இவ்வாறாக என் கணவரின் வியாபார நிலுவைகள் அனைத்தும் வசூலிக்கப்பட்ட திறமையை கண்டு பலரும் வியந்தார்கள்! ஆனால் அவர்களின் கண்களோ, எனக்குப் பின்னாக 'ஆலோசனை கர்த்தராக நின்ற' தேவனை காணவில்லை. 'பேதையாகிய நான்' கர்த்தருக்கே முழு மகிமையும் செலுத்தி அவரை துதித்துப் போற்றினேன்!**

இதில் ஆச்சரியம் என்னவென்றால், பல வருடங்களாய் தங்கள் நிலுவை தொகையை செலுத்த மறுத்து, வழக்கு மன்றத்தில் போர் தொடுத்தவர்கள் அனைவரும் தங்கள் வழக்கை வாபஸ் செய்து விட்டு, நிலுவைத் தொகையை என்னிடம் மிகுந்த கௌரவத்துடன் வந்து செலுத்தினார்கள். அவர்கள் நீண்ட காலமாய் என் கணவர் மீது வழக்கு தொடுத்ததைக் குறித்து என்னிடம் வருத்தமும் தெரிவித்தார்கள். அவ்வாறு வழக்கை ரத்து செய்து வந்தவர்கள் சுமார் 22 நபர்களாவர்! என் கணவரும் அவர்கள் மீது பிரதிவாதம் செய்வதற்கு வழக்கறிஞர்களை நியமித்திருந்தார்! அவை அனைத்தும் 'பனிபோல் மறைந்திட' கர்த்தர் எனக்கு உதவி செய்தார். இதை நான் கூறுவது என் உள்ளத்திற்கு பெரிய அற்புதமாய் தோன்றுகிறது. ஏதுமறியாத ஒரு பெண்ணாகிய எனக்கு, கர்த்தர் தம்முடைய ஞானத்தை சம்பூரணமாய் அருளிச் செய்து 30 நாட்களில் சகலமும் சீர் செய்யப்பட கர்த்தர் அனுக்கிரகம் செய்தார். அந்த 30 நாட்களும், **நான் கர்த்தருடைய கரத்தை இறுகப் பற்றியிருந்தேனே அல்லாமல்....** வழக்கு மன்றத்திற்கோ அல்லது வேறு எந்த அரசு அலுவலகத்திற்கோ அல்லது வேறு எந்த மனிதனை

பார்ப்பதற்கோ ஒரு நாள் கூட வெளியே செல்லவில்லை! நான் கர்த்தருடைய கரத்தை மாத்திரமே பிடித்து நின்றவளாய், அவருடைய ஞானத்தின் கிரியைகள் என் சார்பில் பலத்த விதமாய் கிரியை நடப்பித்ததைக் கண்டு சொல்லி முடியாத ஆச்சரியம் கொண்டேன்!

சகலமும் நேர்த்தியாய் முடிந்த நிலையில், சிலர் என் கணவரின் வியாபாரத்தில் வெகு சிக்கலாய் இருந்த பிரச்சனைகளை எனக்கு சொல்ல முயன்றபோது..... எனக்கு அது, ஒன்றும் விளங்காத 'அரபிக் மொழி' கேட்டதைப்போல் இருந்தது! அப்படி ஒரு ஆச்சரியத்தை என்னோடு இருந்த கர்த்தர், எனக்காக செய்து முடித்தார்! அல்லேலூயா.

– மேடம் குயான்

---

## இக்காலத்து வஞ்சகங்கள் பல, விழிப்புடனிருங்கள்!

மனுஷனுடைய இருதயம், ஒரு இன்னிசை கருவிக்கு ஒப்பாயிருக்கிறது. அந்தக் கருவியை பரிசுத்தாவியின் கரத்தில் ஒப்புக் கொடுத்தால், அவர் அதை இசைத்து மீட்டுவார்! அசுத்தாவியின் கரத்தில் கொடுத்தால், அவனும் தன் போங்கிற்கு இசைத்து மீட்டுவான்! அந்த மனிதன் கையிலேயே கொடுக்கப்பட்டால், அவன் 'மனுஷ ஆவிக்கு' இசைந்தபடி இன்னிசை மீட்டுவான்! இந்த மூன்று பேரும், வித்தியாசமானவர்களாயிருந்தும் 'மார்க்க சம்பந்த' ஒரேவித எழுச்சியை வெளிப்படுத்துகிறார்கள்! இன்னும் இதைவிட மோசமாய், விக்கிரகாராதனைக்காரன் கையில் இந்த இசைக்கருவி மீட்டப்படும் போது 'அதே பக்தி வெள்ளம்' அலைவீச முடியும்! ஒரு கன்னியாஸ்திரீ, தன் ஜெப மாலை நேரத்தில் 'கன்னி மரியாளின்' ஆராதனையில் மெய்யான மார்க்க உணர்வோடு மூழ்கி இருப்பார்கள்! அன்பும், தியானமும், பக்தியும் அவர்களின் தியானத்தில் நிறைந்திருப்பதாகவே அவர்கள் உணர்வார்கள்.

ஆகவே கிறிஸ்துவினுடையவர்கள் அல்லாத மற்றவர்களின் பக்தி உணர்வுகள் 'பாசாங்கு' செய்கிறார்கள் என நாம் தள்ளிவிட இயலாது. **ஆனால் முடிவாக, இவர்களின் எழுச்சியின் உணர்வுகள் தேவனிடத்தி லிருந்து தான் வந்ததா?** என்பதே மிகப்பெரிய கேள்விகுறி! வெளிப் படுத்தின விசேஷம்.4:11 கூறுகிறபடி "தேவனுக்கும் கர்த்தராகிய ஆண்டவர் இயேசுவுக்கும் உகந்த மகிமை செலுத்தப்படுகிறதா?" என்பதை அடையாளமாய் வைத்தே நாம் மாறுபாடுகளை பிரித் தெடுக்க முடியும். இவ்வாறாகவே, 'தேவனுடைய அனுபவத்திற்கு இல்லாத' யாதொன்றையும் நான் மறுத்துவிட பழகி இருக்கிறேன்!

*சபை நிகழ்ச்சியோ, அதன் கூட்டங்களோ அல்லது வேறு எந்த உபதேச போதகங்களோ.... ஆகிய இவைகளின் நடுவில் கிறிஸ்து முதலிடம் வகிக்கிறாரா? என்று சோதித்துப் பார்த்தும் நாம் வஞ்சகங் களுக்கு விலகி நிற்க வேண்டும். வானத்தின் கீழும் பூமியின் மேலும் இயேசு கிறிஸ்துவிற்கே உயர்ந்த ஸ்தானத்தை தேவன் வழங்கியிருக் கிறார். ஆகவே கிறிஸ்துவை உயர்த்தி மகிமைப்படுத்தாத யாதொன் றையும் 'வஞ்சகம் என' நாம் தாராளமாய் புறக்கணித்து விடலாம்.*

**"கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம்" எவ்வளவு கவர்ச்சியாய் இருந்தாலும் அதை வஞ்சகமென காண்பவர்கள் மாத்திரமே வழி விலகாதிருப்பார்கள்!**

*"மனநிலையை மையப்படுத்தி" அதைச் சார்ந்த அனுபவங்களை வஞ்சகம் கவ்விக் கொள்ள முடியும். தாங்கள் மூன்றாவது வானத்திற்கு சென்றதாகவும்! இயேசுவை பார்த்ததாகவும்! இன்னாருக்கு இது சம்பவிக்கும் என தீர்க்கதரிசனம் சொல்வதைப்போல் கூறினாலும், நரகத்தைப் பார்த்ததாகக் கூறினாலும்.... ஆகிய இதுபோன்ற* **'மனநிலை' பரவசத்தைக் கொண்டு திரளான கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.** *உங்களுக்கு முன்பாக இவ்வாறாகக் கூறியவர்களை உற்று நோக்கிப் பாருங்கள்..... அவர்களுடைய மனசாட்சியின் ஜீவியத்தில் 'கிறிஸ்துவின் பிரகாசம்' கொஞ்சம் கொஞ்சமாய் மங்குவதை நீங்கள் கண்டுகொள்ளலாம்! இதுபோன்ற பரவச வஞ்சகத்திற்குள் விழாமல் "கிறிஸ்துவோடு நம்மை ஈர்த்துக் கொள்ளும்" சத்தியங்களே, நம்மை வஞ்சகத்திலிருந்து மீட்டுக்கொள்ள முடியும்! (மத்.3:17, யோ.14:6).*

*பரிசுத்த வேதாகமத்தை, அதன் வேத வாக்கியங்களைப் பாதிக்கும் எதையும், நாம் வஞ்சகம் என புறக்கணிக்க வேண்டும். வேத வாக்கியங்களுக்கு வெளியே அல்லது வேத வாக்கியத்தை கோடிட்டு காட்ட முடியாத எந்த அனுபவத்தையும், யாதொரு போதனை களையும்... சந்தேகத்திற்குரியதாய் வைத்து, பின்பு அதை புறக்கணித்திட வேண்டும். வேத வாக்கியங்களுக்குப் புறம்பான யாதொரு போதனையும் "விடியற்காலத்து வெளிச்சமில்லை" என புறக்கணித்திட ஏசாயா.8:20 தெளிவாக கூறுகிறது!*

*'புதிய சத்தியம்' அல்லது 'தனித்தன்மைக் கொண்டது' என அறிவிக்கப்படும் செய்திகள் எதுவாயிருந்தாலும், அவைகளை நாம் மிகுந்த கவனம் கொண்டு காண வேண்டும். இந்த கடைசி 50 ஆண்டுகளில் வேத வாக்கியங்களுக்குப் புறம்பான கருத்துக்கள் ஏராளமாய் புகுத்தப்பட்டு, அதை வைத்து, திரளான கிறிஸ்தவர்களின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டார்கள்! மேலும்* **"கடைசி நாட்களில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள்"** *எனக்கூறும் வஞ்சகங்களும்*

*இக்காலங்களில் பெருகிவிட்டன! இவ்வாறு, தாங்கள் அப்போஸ் தலரைவிட ஞானமுள்ளவர்கள் என்றோ அல்லது ஆதி சபையின் இரத்த சாட்சிகளைவிட பரிசுத்தமானவர்கள் என்றோ கூறும் யாதொரு நபர்களைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்!*

*மேலும், மெய்யான வல்லமை வேத வசனத்தில் அல்ல.... அது வேத வாக்கியங்கள் அருளிச்செய்த 'ஆவியில்' உள்ளது எனக் கூறுபவர்கள், வேத வாக்கியத்தின் மதிப்பை குறைத்துவிட முற்படுகிற படியால், அவர்களைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.*

**வேத வாக்கிய எழுத்துக்கள் சத்தியத்திற்கு இணையான மதிப்புடையவைகள்! ஒன்று மற்றொன்றை ஏற்றுக்கொள்ளும் புனித நிலை கொண்டவைகள்!**

*தேன் அடையிலிருந்து (கூட்டிலிருந்து) தேனை வெளியே எடுத்துக்கொள்ளலாம். ஆனால், தேன் அடையில்லாமல், தேன் இல்லை! அதுபோலவே,* **சத்தியத்தின் ஆவி,** *பரிசுத்த வேத வாக்கிய எழுத்துக்களுக்கு அப்பாற்பட்டு செயல்படுவதில்லை! ஆகவேதான் நாம்* **பரிசுத்தாவியோடு** *எப்போதும் கொண்டிருக்க வேண்டிய நிறைவும் - தொடர்பும் இருந்தால் மாத்திரமே, வேத வாக்கியங்களின் மீது நாம் கொண்ட அன்பு பெருகிட முடியும்!*

*நாம், சபையிலுள்ள சக கிறிஸ்தவ சகோதர சகோதரிகளோடு கொண்ட உறவில் நாம் கொண்டிருக்கும் மனநிலை மாறும்போதும், வஞ்சகம் ஏற்பட சாத்தியமாயிருக்கிறது!*

**நல்ல கிறிஸ்தவ விசுவாசிகளாய் சபையில் இருப்பதைப்போல் இருந்துகொண்டு, திடீரென்று 'சபையில் கற்ற ஆவிக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்தி' சபையையோ அல்லது சபையிலுள்ள ஆவிக்குரிய சிலரையோ தாக்குவார்கள்.**

*தங்கள் சக விசுவாசிகளை விட்டு வேறு பிரிந்து, குறைசொல்லும் ஆவியில் வளருவார்கள்! தங்களை முதிர்ச்சி பெற்றவர்களென்று எண்ணி, சபை செல்லும் திசையை கூட மாற்ற முயற்சிப்பார்கள். இவர்கள் ஏதாவது சில சரத்துக்களை கோடிட்டு தங்களை நியாயப்படுத்த முயற்சிக்கிறபடியால், மிகுந்த அபாயம் நிறைந்தவர்கள்! இவர்கள் கோடிட்டு காட்டும் சரத்துக்கள்* (Facts), *ஆவிக்குரியதைப்போல் தோன்றினாலும், அது அனைத்தும் அன்பற்ற தன்மை கொண்டவைகள்! தங்கள் சக கிறிஸ்தவர்களோடு இணைந்து அன்பு பாராட்ட தவறும் யாதொரு மேன்மையும் புறக்கணிக்கப்பட வேண்டியவைகள்! (1யோவான்.3:18,19).*

*உலகத்தோடு கொண்ட மனப்பான்மையில், வஞ்சகங்கள் நமக்குள்ளும் சபைக்குள்ளும் பிரவேசித்திட முடியும். ஒரு உத்தமமான*

*சபையில் இருந்துகொண்டே மனுஷீகமான சந்தோஷத்தை நாடுவதும், தேவனற்ற இன்பங்களுக்கு கைக்கொடுப்பதும், பூமிக்குரிய ஐசுவரியத்திற்கும் கனத்திற்கும் பின்னால் போவதும், கிறிஸ்தவ மறுரூபத்திற்கு இடம் கொடாமல், பொதுவான கிறிஸ்தவ சமுதாயத்திற்கு தன் மனதை பறி கொடுத்து நரகம் நோக்கி பயணம் செய்ய விரும்புகிறவர்களும், ஆகிய இவர்கள், கிறிஸ்து வாசம் செய்யும் மெய்யான சபைக்கு விரோதிகள்! (1யோ.2:15-17; 2கொரி.6:14).*

**உலகத்தோடு சமரசம் செய்து கொள்ள அனுமதிப்பது ஓர் கள்ள ஆவி என்றே கூற வேண்டும்! அதை அனுமதிக்கும் சபையை, கள்ள சபை என்றே கூற வேண்டும்!**

*இவர்கள் 'கிறிஸ்துவின் சிலுவைக்கு' பகைஞர்களாய் மாறி சாத்தானுக்கு கை கொடுப்பவர்கள். இவ்வித கொடூர வஞ்சகங்கள் மத்தியில், எங்கெல்லாம் பரிசுத்தம் 'அழகுடையதாய்' போற்றப் படுகிறதோ! எங்கெல்லாம், பாவம் 'பொறுத்து கொள்ள முடியாததாய்' எதிர்க்கப்படுகிறதோ! அதுபோன்ற ஆவியே, நாம் மனதார ஏற்றுக்கொள்ள வேண்டிய புனிதமான ஆவியாகும்! அவ்வாறு இல்லாமல், நாம் மேலே கண்ட வேறுபாடான ஆவிகளை* **வஞ்சக ஆவி** *என்று நாம் தெளிந்த புத்தியுடன் விளங்கிக்கொள்வது, எந்த ஒரு உண்மையான சபையிலுள்ள மக்களுக்கும் சாலச் சிறந்ததாகும்!*

*– A.W. டோசர்*

---

## 'சத்திய மணி ஓசை' ஓங்கி தொனிக்க வேண்டிய காலம் இது!

*இன்று, நமக்கும் நம் சபைக்கும் எது வேண்டும்? 'கர்த்தருடைய புயமே' எழுந்து வர வேண்டும்! மகா வலிமை கொண்ட அந்த புயமே நாம் எதிர்பார்த்திருக்கும் எழுப்புதலைக் கொண்டு வர முடியும்! அது சத்தியத்தினிமித்தம் எழுந்து வரும் கண்டிப்பின் வார்த்தைகளாகவே இருக்கும்! இவ்வித 'சத்திய புத்திர' தேவ மனிதர்கள் நம்மிடத்தில் உண்டோ? இன்று நமக்கு அற்புதங்களா தேவை.....பரத்திலிருந்து 'ஜொலித்து வரும்' தேவ செய்தியே நமக்குத் தேவை! இன்று சபையில் தடுமாறி நிற்கும் ஜனங்களின் உள்ளத்தில் மேலோங்கி நிற்கும் குமுறல் என்ன தெரியுமா?* **"கர்த்தரிடத்திலிருந்து எங்களுக்கு ஏதேனும் வார்த்தை உண்டா?"** *என்றே கேட்கிறார்கள். ஏனெனில், இந்த உலக ஞானிகள் போல பேசும் பிரசங்கிகளிடம், கர்த்தருடைய வார்த்தையை இவர்கள் கேட்க முடியவில்லை! இவர்களுடைய குமுறலுக்கு யோவேல்2-ம் அதிகாரத்தையும், மல்கியா3-ம் அதிகாரத்தையும் ஓர் நிறை வேறுதலாய் நமக்குத் தந்திட தேவன் வாஞ்சை கொண்டுள்ளார்:* **"நீங்கள் தேடுகிற ஆண்டவர் நம்முடைய ஆலயத்திற்கு தீவிரமாய் வருவார்!"**

*என்ற தேவனுடைய வார்த்தை நிறைவேறுதலின் காலம் இது! இதுவே நம் யாவருக்கும் ஆறுதலாய் இருக்கக்கடவது!*

*தேவன் வருவார்! தம் 'அனல் கொண்ட' தீர்க்கதரிசிகள் மூலமாய் வருவார்! இப்போது காணும் வறட்சியை, ஒரு நொடிப்பொழுதில் மாற்றி விடுதலை தருவார்! யோவான் ஸ்நானகன் வருகை தந்த சில நிமிடங்களுக்கு முன்பாக வரை, "அந்த அக்கினி மயமான தீர்க்கதரிசி" நம்மோடுதான் இருக்கிறார் என ஜனங்கள் அறியாதிருந்தார்கள். அன்றுபோலவே, இன்றும் நடந்துவிடும்! என்பதை நான் உறுதியாக விசுவாசிக்கிறேன். மறைவிலிருக்கும் அந்த தேவ மனிதர்கள் 'திடீரென்று' வெளிப்படும் காலம் வந்துவிட்டது. அவர்கள், ஆவியின் வலிமையான புயத்தோடு வருவார்கள்!*

> **"ஜொலித்து எரியும் சத்தியங்களோடு" வருவார்கள்! விடாய்த்துப் போன ஜனங்களின் காதுகளில் சத்திய மணி ஓசை எழுப்புவார்கள். அவர்களுடைய சத்திய வார்த்தைகள் 'இரும்பையும்' உருக்கி விடும்! அந்த தாசர்களின் வருகைக்காகவே தேவன் பொறுமையுடன் காத்திருக்கிறார்.**

*தீர்க்கதரிசி எழும்பி நிற்கும்போது "அவர் வரும் நாளை சகிப்பவன் யார்?" என்றே கர்ஜனை புரிவார். அக்கிரமத்தையும், கொடிய பாவத்தையும் ஒரு வண்டியில் ஏற்றி இழுப்பதைப்போல், பாவ இன்பத்தை சுமந்து செல்வோர் 'கர்த்தருடைய ஆவியானவர் அசைவில்' நெற்பயிர் சாய்வதைப்போலவே, கவிழ்ந்து விடுவார்கள்! சீனாவின் ஒய்யார நகரமாய் விளங்கும்* **'கிரம்ளின்' நகரம்** *அன்று நடுநடுங்கிப்போகும். மாபெரும் எழுப்புதல் அக்கினி, கம்யூனிச வாதத்தால் ஒடுக்கப்பட்ட சீன தேசத்தையும், ரஷ்ய தேசத்தையும், ஜெர்மனி தேசத்தையும் தமது அக்கினியால் தேவன் பற்றி எரியச் செய்ய வேண்டுமென்றே நான் வேண்டி நிற்கிறேன்!*

*அன்று மோசேயின் தலைமையில் எகிப்தை அதிரச் செய்ய 'பத்து வாதைகளை' தேவன் அனுப்பினார். இன்றோ, உலக தேசங்களை அதிரச் செய்ய, அந்த பத்து வாதைகளைக் காட்டிலும் கொடூர வாதைகளை தேவன் கொண்டு வந்துள்ளார்! அன்று எகிப்து தேசம் அதிர்ந்தது! ஆனால் இன்றோ கொடிய பாவம் நிறைந்த மனிதனின் இருதயம் உருகவில்லை, அதிரவும் இல்லை! அது ஏன்? அன்று "விசுவாசத்தால் இராஜ்ஜியங்களை ஜெயித்தார்கள்! சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்!" ஆனால் இன்றோ "யாரை விழுங்கலாம் என்று வகைத்தேடி சுற்றித் திரிகிற சத்துருவாகிய கெர்ச்சிக்கும் சிங்கத்தை" வாயடைத்து கட்டிட காலம் வரவில்லையோ? அன்று* **சிங்கங்களின் வாய்களைக் கட்டிய தாசர்களின் 'இரகசியம்' நமக்கும் வெளிப்பட**

**வேண்டும்** *அல்லவோ? இந்த கொடிய பாழுலகிற்கு துரிதமாய் நியாயத்தீர்ப்பை கொண்டு வந்திட தேவ ஆவியினால் நடத்தப்பட்ட புருஷர்கள் தேவை! அந்த புருஷர்களே, இன்று நம் தேவை!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## புகழ்ச்சியில் பூரித்து, இகழ்ச்சியில் ஒடுங்குவது நலம்தானோ?

***நா**ன் கர்த்தருக்கு செய்த ஊழியத்தை "சமூக சேவை" என, அரசு என்னை அங்கீகரித்துப் புகழ்ந்தது. நான் கர்த்தருக்கே ஊழியம் செய்தேன் என்றும், ஆத்துமாவை மீட்பதற்காகவே உழைத்தேன் என்றும், அரசிற்கோ அல்லது அரசு அதிகாரிகளுக்கோ தெரிவதில்லை.*

சமூக சேவை என்பது வேறு, கர்த்தருடைய ஊழியம் என்பது வேறு என்ற..... கிழக்கிற்கும் மேற்கிற்கும் உள்ள வித்தியாசம் அவர்களுக்குப் புரிவதில்லை!

*இருப்பினும் அரசு அலுவலகத்திலிருந்து வந்த பாராட்டுகள் என் உள்ளத்தில் 'மனுஷீக புகழ்ச்சியின்' பூரிப்பைக் கொண்டுவர முயன்றதைக் கண்டேன். கேடுபாடு நிறைந்த என் மாம்சம், அந்த புகழ்ச்சியில் சற்றே தள்ளாடி விட்டது! இந்த பாராட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு சில வாரத்தில், என் ஆசிரமத்திலுள்ள இரண்டு பெண்கள் ஒரு மறைவான இடத்தில் நின்று கொண்டு* **'என்னை வசைபாடி தூஷித்ததை'** *நான் கேட்டு அதிர்ச்சியுற்றேன். ஓங்கி நின்ற என் அன்பான உள்ளம், மடமடவென்று சரிந்து விழுந்ததை நான் பார்த்தேன்!*

*துக்கம் என் தொண்டையை அடைக்க, கர்த்தருக்கு முன்பாக என்னைக் கொண்டு வந்து நிறுத்தினேன்! அப்போது கர்த்தர் என்னிடம் முகமுகமாய் பேசி "என் மகளே, மனுஷருடைய புகழ்ச்சி உன்னை அண்டிவந்தபோது உன் உள்ளம் பூரித்தது உண்மை அல்லவா? இப்போது உன் ஆசிரமத்து பெண்களின் இகழ்ச்சி மொழிகளைக் கேட்டதும் உன் இருதயம் ஒடுங்கி வருந்துவதும் உண்மையல்லவா?*

இவ்வாறு புகழ்ச்சிக்கு பூரிப்பதும்! இகழ்ச்சிக்கு ஒடுங்குவதும் 'கல்வாரி அன்பு இல்லை!' என்பதை அறிந்து கொள்வாயாக! உன் ஆண்டவருக்குப் பிரியமாய் நீ வாழ்ந்தால் போதும் என உணர்வடைவாயாக!" என பேசினார்.

*நான் உடனே தாழ் பணிந்து "ஒ கர்த்தாவே, உம்முடைய கல்வாரி அன்பின் ஆழம், நீளம், உயரம் யாரால் அறிந்திடக்கூடும்? உம் விஸ்தாரமான தெய்வ அன்பை என் உள்ளத்தில் ஊற்றுவீராக!" என ஜெபித்து கண்ணீர் மல்க மருகி நின்றேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

## என் உள்ளம் கவர்ந்த நித்திய நறுமணம்!

**ஒ**ரு குழந்தை பிறந்தவுடன், பெற்றெடுத்த தன் தாயை நேசிக்கத் தொடங்குகிறது. தாயின் நேசம் ஒன்றே அந்தக் குழந்தையின் மனதில் நிறைந்திருக்கிறது. ஆகிலும் பெற்றெடுத்த தாயின் உள்ளம், தன் பிள்ளையை நேசிப்பதைப் போல், அந்தப் பிள்ளை தன் தாயை நேசிக்க முடிவதில்லை! அந்த பிள்ளையின் வயது வளர வளர, தாயின் அன்பை இன்னும் அதிகமாய் அறியத் தொடங்கி, தாயின் அன்பை பல்வேறு சமயங்களில் ருசித்து மகிழ்கிறது. **மட்டில்லாத, நித்தியமான தெய்வ அன்பை** நாம் முழுவதும் விளங்கிக்கொள்ள வேண்டுமென்றால், நம்முடைய அறிவும் நம்முடைய வயதும் மட்டில்லாத நித்திய முள்ளதாய் பரந்து விரிந்திருக்க வேண்டும். அப்போது மாத்திரமே நித்தியமான தெய்வ அன்பை நம்மால் அளந்திட முடியும்! இருப்பினும், அந்த சிறு பிள்ளையைப் போலவே வயது ஆக, ஆக, தெய்வ அன்பையும் அவரது பிரசன்னத்தையும், நாம் விஸ்தாரமாய் ஆண்டு அனுபவித்திட முடியும். நாம் ஆவிக்குரிய ரீதியாய் வளர்ந்து வரும்போது, அவரை அறிகிற அறிவில் நாம் வளர்ச்சி அடைந்து..... அவரை அதிகமாய் அறிந்திட விரும்புகிறோம். நம்முடைய வாழ்நாள் காலம் குறுகியது என நாம் பொறுமையற்று இருக்கத் தேவையில்லை!

**அவரது அன்பை ஆழமாய் அறிந்துக் கொள்ள, அவரை அறிகிற அறிவில் தொடர்ந்து வளர.... நித்தியம் நமக்கு முன்பாக நீண்ட விஸ்தாரத்துடன், நமக்காக காத்திருக்கிறது என்பதை அறிந்து, பூரிப்படையுங்கள்!**

நான் ஒருநாள், ஒரு அழகிய மலரைக் கண்டேன்! அதனுடைய நறுமணம் என் உள்ளத்தை கொள்ளைக்கொண்டது! அந்த நறுமணத்தின் மகிழ்ச்சியில், மலரை நான் உற்று நோக்க.... நோக்க, என்னுடைய அற்புதமான **சிருஷ்டி கர்த்தாவை** என் ஆவிக்குரிய கண்களால் கண்டு உள்ளம் பூரித்து கண்ணீர் விட்டேன். இன்று மாலையில் வாடிப்போகும் இந்த மலரைக் காட்டிலும், என் ஆத்துமாவில் தேவன் வைத்திட விரும்பும் **மாறாத கிறிஸ்துவின் நற்கந்தத்தை** நான் எண்ணத் தொடங்கியபோது, மலரிலிருந்து என் கண்களைத் திருப்பி, என் அன்பு இரட்சகரின் முகத்தைக் கண்டேன்.

“ஓ கர்த்தாவே, நீர் எத்தனை ஆச்சரியமானவர், என் ஆத்துமாவின் மீது நீர் காண்பித்திடும் அன்பும், உமது மகிமையான முக பிரசன்னமும் எத்தனை இனியது! அது வாடும் மலரின் நறுமணமல்ல, வாடாத நித்திய நறுமணம்” என ஜெபித்து, அந்த மலர் தோட்டத்தில் முழங்கால் படியிட்டு அவரைத் தொழுதுகொண்டேன்!

– சாது சுந்தர்சிங்

## 'கர்த்தருடைய நாள்' கர்த்தருக்கே சொந்தமாக வேண்டும்!

**வா**ரத்தின் முதல் நாள், கர்த்தருடைய நாள்! இந்த நாளின் முக்கியத்துவத்தை நம் சபையிலுள்ள ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். வாரத்தின் ஒரு நாளை கர்த்தர் பிரித்தெடுத்து, அதை 'கர்த்தருடைய நாள்' (THE LORD'S DAY) என மகிழ்வுடன் பெயரிட்டார். இயேசுவை பின்பற்றும் சீஷர்கள் கர்த்தருடைய நாளைக் குறித்த முக்கியத்துவத்தை அதிகமாய் உணர்ந்திருக்கிறார்கள்! இதற்கு நேர்மாறாக "இந்த நாளில் பயணம் செய்யலாமா? அல்லது கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கலாமா?" என கேட்டால், நான் உங்களுக்குச் சொல்லும் விடை "அது, எனக்குத் தெரியாது!" என்பது தான். ஆனால் ஒன்று நான் அறிவேன், அது என்னவென்றால் "இந்த நாள் கர்த்த ருடைய நாள், அது அவருக்குச் சொந்தமான நாள்!" இது தான் என்னுடைய விடை. ஆகவே நான் உங்களுக்கு விளக்கிக்கூற விரும்புவதெல்லாம் "இந்நாளில் ஆண்டவர் எதையெல்லாம் செய்கிறாரோ, அதை நீங்கள் செய்திட முடியும்! அதுபோலவே அவர் எதையெல்லாம் செய்திட மாட்டாரோ, அதை நீங்கள் செய்திட கூடாது!" என்பதுதான்.

என் ஜீவிய காலம் முழுவதும், 'கர்த்தருடைய நாளை' விசேஷித்த நாளாய் நான் பிரித்து வைத்தே வாழ விரும்புகிறேன்.

> சங்கீதம்.90:10 கூறுகிறபடி நான் 70 வருடங்கள் வாழ்ந்தால், என் சிரம் தாழ்த்தி, என் கர்த்தாவிடம் நான் "ஓ தேவனே, என் ஜீவிய 70 - வருட எல்லையை வைத்து, என் முழு 10 வருடங்களும் உமக்கே அர்ப்பணம்" என சமர்ப்பிப்பேன்! இது வேதப்பூர்வமான, துல்லியமான அர்ப்பணம் என்றே கூறுவேன்.

வாரத்தின் ஒவ்வொரு முதலாம் நாளையும், நான் நிச்சயமாய் கர்த்தருக்கென்றே கொடுத்து விடுவேன். ஏனெனில், அந்த நாள் என்னுடைய நாளல்ல.... அது, கர்த்தருடைய நாள்!

கர்த்தருடைய நாளின் ஒவ்வொரு மணி நேரமும் எனக்குச் சொந்தமானதல்ல, அது கர்த்தருக்கே சொந்தம்.... நான் சிறிது நேரம் ஓய்வுஎடுத்தால், அது கர்த்தருக்காகவே ஓய்வெடுக்கிறேன்! நான் ஒரு வேலையில் ஈடுபட்டால், அந்த வேலையை கர்த்தருக்காகவே செய்கிறேன்! ஆகவே நான் யாதொன்றை செய்தாலும் அல்லது நான் யாதொன்றை செய்யாதிருந்தாலும், அவை அனைத்தும் கர்த்தருக்கே உரியதாகும். பக்தி உணர்வுடன் கூடிய இந்த கர்த்தருடைய நாளில் **'ஓய்வுநாள் ஆசரிப்பு' என்ற வாசனை, துளிகூட இருப்பதில்லை!** ஏனெனில், 'ஓய்வுநாள் மீறுதலுக்குரிய தண்டனை' யாதொன்றும் இங்கு சொல்லப்

*படவில்லை. ஆம், நானாகவே மனமுவந்து 'முழுவதுமாய் அந்த நாளை' கர்த்தருக்கென்று படைக்கிறேன்! இந்த படைப்பு "வாரத்தின் 7- நாளும் கர்த்தருக்காகவே வாழுகிறேன்! என இந்த 'புதிய உடன்படிக்கையில்' நான் ஜீவிப்பதைவிட, மேலோன விசேஷித்த நாள்" என்றே உங்களுக்கு உணர்த்துகிறேன்!*

*இதை அப்போஸ்தலனாகிய யோவான் "கர்த்தருடைய நாளில், நான் ஆவிக்குள்ளானேன்!" என எழுதியுள்ளார் (வெளி.1:10). இவ்வாறு கர்த்தருடைய நாளை மதித்து ஜீவித்தவர்கள் 'அந்நாளில், நான் ஆவிக்குள்ளானேன்!' என யோவான் அப்போஸ்தலன் கூறியதைப் போலவே சாட்சி பகிர்ந்திட முடியும். விசேஷமாய், கர்த்தருடைய நாளில் பரிசுத்தாவியானவர் சபையில் அபரிதமாய் எழுந்தருளி ஆசீர்வதிப்பார். அந்த ஆசீர்வாதம், நம் குடும்பத்தார் அனைவருக்கும் உரித்தாக வேண்டும்! அப்போது "நான் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்" என நீங்கள் கூறுவது, உங்களுக்கும் நீங்கள் கூடிவரும் சபைக்கும் நலம் உண்டாகும்!*

பல வருடங்களாய் சபையில் இருப்பவர்களைக் கண்டு, புதிய இளம் விசுவாசிகளும் "கர்த்தாவே, இது உம்முடைய நாள்" என தங்களுக்கு இடறில்லாமல் அர்ப்பணித்திட முன்வர வேண்டும்!

*மெய்யாகவே நான் கண்ட உண்மையை கூறுகிறேன்: யாரெல்லாம் தங்கள் வாலிப பிராயத்திலிருந்தே, இந்த நாளை "கர்த்தருடைய நாள்" என அர்ப்பணிக்கிறார்களோ, அதுபோன்றவர்கள் கூடிவரும் ஒரு சபைக்கு 'மிகப்பெரிய ஆசீர்வாதத்தை' கர்த்தர் கட்டளையிடுவார்!*

*– வாட்ச்மன் நீ*

---

## 'எந்த உடன்படிக்கையும்' இல்லாத கிறிஸ்தவர்களா?

*ஒரு குறைவான பக்தியை வைத்துக்கொண்டு 'எந்த உடன் படிக்கையும் இல்லாத' ஜீவியத்தில் முடிவடைகிறவர்களே 'ஜன சங்க' (CLUB) கிறிஸ்தவர்கள்! இன்று அநேக கிறிஸ்தவர்கள் இவ்வாறாகவே இருக்கிறார்கள்: "தேவன் தங்களை பழைய உடன்படிக்கையி லிருந்தும் பிரமாணங்களிலிருந்தும் விடுதலை செய்தார்" என கூறிக் கொண்டு 'எந்த உடன்படிக்கையும் இல்லாத' கதியை அடைகிறார்கள்.*

**இதுபோன்ற ஜனங்கள், பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தை அதிகம் விரும்புவார்கள். அதிலுள்ள போதகத்தை தவறாய் புரிந்து கொண்டு "பிரமாணங்களிலிருந்து தாங்கள் விடுதலை பெற்றதாக கூறி" எந்த பிரமாணத்தையும் விரும்பாத மக்களாய் போய் விடுகிறார்கள்!**

*ஆனால், உடன்படிக்கை ஏதுமில்லாமல் "கிறிஸ்துவோடு*

திருமணம் இல்லை!" எனவே, ஒரு உடன்படிக்கையில் பிரவேசித்த பின்பே, நானும் என் மனைவியும் திருமணம் செய்து கொண்டோம்!

திருமணத்திற்கென்று ஒரு சட்ட-திட்ட புத்தகம் இல்லை! ஆகிலும், **அன்பின் அடிப்படையில் சில பிரமாணங்கள்** உண்டு. உதாரணமாக: தேவனுடைய கிருபையை கொண்டு, என்னுடைய மனைவியை நான் ஒருபோதும் வஞ்சிப்பதில்லை! இது எந்த ஒரு திருமண சட்ட புத்தகத்திலிருந்தும் "நீங்கள் திருமணமானவுடன் இதை செய்யகூடாது அல்லது அதை செய்யவேண்டும்" என கூறப்படவில்லை. நான் என் மனைவியை நேசிக்கிறபடியால், என் மனைவிக்கு உண்மையாயிருக் கிறேன்! அவளை நேசிக்கிறபடியால், யாதொரு தீங்கும் அவளுக்கு நான் ஒருபோதும் செய்ய விரும்புவதில்லை. நாம் கிறிஸ்துவை மணந்து கொள்வதும், இந்த அன்பின் அடிப்படையிலேயே சில பிரமாணங்களை நாம் பெற்றுக் கொள்கிறோம். "அவர் என்னை முந்தி அன்புகூர்ந்தபடியால்" என்பதும் "நான் அவரை முழு இருதயமாய் நேசிக்கிறபடியால்" என்பதுமே அந்த அடிப்படையாயிருக்கிறது!

– சந்தோஷ் பூணன்

---

## உன்னதமே, நம் பெலன்!

'இளைஞர்' இளைப்படைந்து சோர்ந்து போவார்கள்! என ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிடுவதை வைத்துப்பார்த்தால், சோர்வில்லாத வாழ்விற்கு 'வயோதிபர்' என்றே நாம் கருதத் தோன்றும்! ஆனால், அவரோ அப்படிக்கூறாமல் **'கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள்'** ....சோர்ந்து போக மாட்டார்கள் என்றலல்லவா குறிப்பிடுகிறார்! (ஏசாயா.40:30,31). இங்குதான் அவர் கூறவந்த இரகசியம் இருக்கிறது! ஆம்: சோதனையும், துன்பமும், பாடுகளும் நிறைந்த ஒவ்வொரு நாள் ஜீவியத்திலும், இவர்கள் கர்த்தருடைய சமூகம் சென்று அமர்ந்து, காத்திருந்து.... பாவம் கழுவப்பட்டு, பல்வேறு சூழ்நிலையின் நிமித்தமாய் அவரிடம் ஆறுதல் பெற்று "புதுபெலன்" அடைவார்கள்!

ஆகவே, இவர்களின் 'புதுபெலன்' இரகசியம் கேளுங்கள்: எத்துன்ப நேரத்திலும், நாள்தோறும் "**கழுகுகளைப்போல் செட்டைகளை அடித்து**" உயர உயர எழும்புவார்கள்! அந்த உயர்ந்த ஜெப ஸ்தலத்தில் 'கர்த்தருக்கு காத்திருந்து' தங்கள் அன்றாட பெலனைப் பெற்று திரும்புவார்கள்! இவர்களே, எத்துன்பத்தில் ஓடினாலும் இளைப்படை யார்கள்! எந்த சூழ்நிலையில் நடந்தாலும் சோர்ந்து போகார்கள்! ஏன் தெரியுமா? "உன்னதமே, அவர்களின் பெலன்!" அல்லேலூயா.

– T.ரத்தினகுமார்

## இரத்த சாட்சிகளின் தீரத்திற்கு 'இரகசியம்' யாது?

பேசில் என்ற தேவபக்தன், தீக்கிரையாக்கப்பட்ட சில இரத்த சாட்சிகளின் நடவடிக்கைகளை தீவிரமாய் ஆராய்ந்து, கீழ்கண்ட குறிப்புகளைக் கூறியுள்ளார். அக்கினியில் வைத்து கொளுத்தப் படுவதற்கு முந்தினநாள், அவர்கள் எல்லோரும் பிறந்த மேனியுடன் இரத்தத்தை உறைய வைக்கும் குளிரில் நிறுத்தப்பட்டனர்! அப்பொழுது அந்த இரத்த சாட்சிகள் தங்களை இவ்விதமாக தேற்றிக் கொண்டனர்: "குளிர் கொடியது. ஆனால், பரலோகம் இனிமையானது! இங்கு குளிரில் விறைத்து நடு நடுங்குகின்றோம். ஆனால் பரதீசில் ஆபிரகாமின் மடியின் இதமான வெம்மை இந்தக் குளிரை விரட்டி அடித்து ஓட்டிவிடும்". இவ்வாறாக, இவர்களது கண்கள் "பரனையே நோக்கி பார்த்தபடியால்" அவர்களின் துன்ப நேரங்களிலெல்லாம் இன்ப ஆறுதலை பெற்றார்கள்!

கேலான் என்ற பரிசுத்த மனிதன் 'உரன் ஆஸ்கோபஸ்' என்ற மீனைப் பற்றி குறிப்பிடும்போது, அதற்கு ஒரே ஒரு கண்தான் உண்டு எனக் கூறி, அந்த கண்ணும்கூட, சதா வானத்தையேதான் நோக்கியிருக்கும் என்பார். துன்பம், துயரம் அனுபவிக்கும் கிறிஸ்தவனின் கண்கள் எப்பொழுதும் பரலோகத்தையே நோக்கிக் கொண்டிருந்தால் அவனது ஆத்துமா ஒருபோதும்.... ஒருபோதும் சோர்வே அடையாது!!

இவ்வாறு இரத்த சாட்சிகளாய் மரித்த, விசுவாச வீரம் நிறைந்த மாந்தர்களின் வாழ்விற்கு ஓர் "பின்னணி" உண்டு! இவர்கள், என்றோ ஒரு நாள் திடீரென்று "பரத்தை நோக்கிப் பார்த்து" வீரம் பேசவில்லை.... இவர்களின் வாழ்க்கை முழுவதுமே "பரத்தை நோக்கிப் பார்த்த ஜீவியம் தான்!"

"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்!" (கொலொசெயர்.3.2) என்ற வசனத்தின்படி, தீவிர நாட்டமும் தேட்டமும் "பரனே அன்றி" இவர்களுக்கு வேறெதுவும் இருக்க வில்லை! பாவமான அசுத்த சோதனையில்... பரனைக் கண்டார்கள்! தீயமொழியால் வசைத்திடப்பட்டபோது.... பரனைக் கண்டார்கள்! துன்மார்க்கமாய் நீதி பறிக்கப்பட்டபோது... பரனைக் கண்டார்கள்! பகையின் மத்தியில், பொறாமையின் மத்தியில், போட்டியின் மத்தியில், தீய தனக்கானதை தேடுவோர் மத்தியில்.... பரனை 'பரன் ஒருவரையே' வாஞ்சையோடு தேடி கண்டார்கள்!

தங்கள் ஜீவகாலமெல்லாம், பரனை ஏறிட்டு கண்டவர்கள்... அன்று, ஸ்தேவான் 'கல்லெறியப்பட்டபோது'.... தன் வாழ்வின் இறுதியிலும்.... இரத்த சாட்சியாய் மரிக்கும் அந்த கொடிய வேளையிலும் 'பரனைக் காண' தன் கண்களை வழக்கம் போலவே ஏறெடுத்து நோக்கினார்கள்! என்ன ஆச்சரியம், துன்பத்தில் முடிவுபரியந்தம் தன்னை நோக்கிப் பார்த்தவர்களை வரவேற்க, தங்கள் இரட்சகர் எழுந்து நின்று கரம்விரித்த காட்சி கண்டு சொல்லொண்ணா அகமகிழ்ந்தார்கள்! இவர்களின் மகிழ்ச்சியை, இவ்வுலகில் உள்ள வேறு எதற்கும் ஒப்பிட இயலாது!!

- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்

## வாழ்வின் பாதையில், இரட்சகர் நமக்கு உண்டு!

ஒருமுறை நாம் விசுவாசத்தோடு ஆண்டவரது கரங்களில் நமது பிரச்சனைகளை ஒப்புக்கொடுத்த பின்னர், அவைகளை நினைத்து திரும்பவும் நாம் ஒருக்காலும் கவலைப்படத் தேவையில்லை. நம்முடைய பிரச்சனைகளை ஆண்டவர் கரங்களில் விட்டு விட்டு வந்த பின்னர், மீண்டும் அவர் பின்னாக ஓடி அந்தப் பிரச்சனைகளை அவரது கரங்களிலிருந்து தட்டிப் பறித்தெடுத்து, திரும்பவும் அவற்றிற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருத்தல் கூடாது. நாம் நமது பொறுப்புகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியாது என்பது உண்மைதான்! ஆயினும், நாமோ நம்முடைய பிரச்சனைகளை **மகா திறமையான தேவாதி தேவனின் கரங்களில்** அளித்துவிட்டோம்! நம்முடைய தேவனோடு நாம் நாள்தோறும் ஐக்கியம் கொண்டு ஜீவிப்பதற்கு அனுகூலமான ஓர் பாடல், ஸ்விட்ஸர்லாந்து நாட்டுப் பழைய பாட்டுப் புத்தகமொன்றில் கீழ்கண்டவாறு உள்ளது:

*நான் சந்திக்கும் துன்பம், கடந்து செல்லும் துன்பமே!*
*துன்பத்தை எதிர்கொள்ள உமது பெலன் ஈவுமே!*
*என் தந்தையே உமது ஞானம் பெரிது! மா பெரிது!*
*தந்திட்டேன் என்னையும் முழுவதுமே.....*
*அஞ்சிடேன் இனியும் அஞ்சிடேன்!*

நமக்கு முன்னாலுள்ள அநேக உத்தம கிறிஸ்தவர்களைப் போலவே, நாமும் பாடுகளையும், உபத்திரவங்களையும், துன்பங்களையும் இந்த ஆண்டும் சந்திப்போம்! ஆனால், நாம் ஒரு மாட்சிமையான இரட்சகனையும் நம் வசம் கூடவே வைத்திருக்கின்றோம் என்பதை மறத்தல் கூடாது!

எப்படி ஒரு குழந்தையானது, தான் செய்யும் நன்மை, தீமையான காரியங்களின் மூலமாக அனுபவங்களைக் கற்றுக்கொள்ளுகின்றதோ அப்படியே வாழ்க்கையில் தனக்கு வந்து சம்பவிக்கும் பிரச்சனைகளை மனமகிழ்ச்சியுடன் ஏற்று, அவற்றை ஆண்டவர் கரங்களில் வைப்பதன் மூலமாகவே, ஒருவன் முதிர்ந்த கிறிஸ்தவனாகின்றான்!

ஓ வாலிபனே! நீ இன்று முதல் நம் இரட்சகரை விசுவாசித்து வாழ்ந்தால், இந்த ஆண்டின் முடிவில் ஓர் சிறந்த, தூய பரிசுத்தவானாய் நீ முற்றுப்பெறுவது அதிக நிச்சயம்!!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.